*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி*
*சென்னை*

*09-08-2025* *SATURDAY* *7.15 PM*

*ஆகாஷ்வாணி*

***தலைப்புச் செய்திகள்***

*1. காலனி ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய வீரர்களின் துணிச்சல் அளப்பரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.*

*2. சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம் மற்றும் துணிச்சலை நாடு என்றென்றும் நினைவுகொள்ளும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

*3. அடுத்த மூன்றாண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி இருமடங்காக அதிகரிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*4. கென்யாவில் நேரிட்ட சாலை விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர்.*

*5. ஆசியகோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று சவுதி அரேபியாவை எதிர்கொள்கிறது.*

***இனி விரிவான செய்திகள் –***

*<<<<<<>>>>>*

*காலனி ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய வீரர்களின் துணிச்சல் அளப்பரியது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், 100 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கக்கோரி ரயில் சம்பவத்தை நினைவு கூர்ந்துள்ளார்.*

*நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட அனைவரது தியாகமும் மக்களால் என்றென்றும் நினைவுகூரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.*

*வளமான மற்றும் வலிமையான இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற அவர்களது கனவுகளை நனவாக்கும் வகையில் மத்திய அரசு பணியாற்றி வருவதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*<<<<<<>>>>>*

*கக்கோரி ரயில் சம்பவம் துணிச்சல், நாட்டுப்பற்று, தியாகம் ஆகியவற்றின் அடையாள சின்னமாக திகழ்கிறது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில அவர் வெளியிட்டுள்ள பதிவில், 1925-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதி நடைபெற்ற இச்சம்பவம், சுதந்திரப் போராட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது என்று கூறியுள்ளார்.*

*சுதந்திரப் போராட்ட வீரர்களின் துணிச்சல் மற்றும் வீரத்தை நாடு என்றென்றும் நினைவுகொள்ளும் என்று திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>*

*அடுத்த மூன்றாண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி இருமடங்காக அதிகரிக்கும் என்று பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத்துறை செயலர் டாக்டர் சமீர் காமத் தெரிவித்துள்ளார்.*

*மகாராஷ்ட்ரா மாநிலம் புனேயில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்ய மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஆர்வம் காட்டி வருவதாக கூறினார்.*

*சிறிய வடிவிலான பிரம்மோஸ் ஏவுகணை மற்றும் இலகுரக டேங்குகள் வடிவமைப்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அது சார்ந்த கல்வி நிறுவனங்களின் ஆதரவுடன் நாடு முழுவதும் ஏவுகணை மற்றும் பாதுகாப்பு*

*தளவாட உற்பத்திக்கான 15 சீர்மிகு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.*

*மத்திய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் சுயசார்பு நாடாக இந்தியாவை உருவெடுக்க செய்யும் என்று டாக்டர் சமீர் காமத் நம்பிக்கை தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானின் ஐந்து போர் விமானங்கள் மற்றும் ஒரு வான் பாதுகாப்பு அமைப்பு அழிக்கப்பட்டதாக விமானப்படை தளபதி அமர்பிரீத் சிங் தெரிவித்துள்ளார்.*

*பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், செயற்கைக்கோள் அனுப்பிய புகைப்படங்கள் மற்றும் உளவுத்துறை அமைப்புகளின் தகவலின் பேரில், தீவிரவாத முகாம்கள் மற்றும் பாகிஸ்தானின் போர் விமானங்கள் துல்லியமாக தாக்கி அழிக்கப்பட்டதாக தெரிவித்தார்.*

*செயற்கைக்கோள் அனுப்பிய தெளிவான புகைப்படங்கள் இலக்குகளை குறிவைத்து தாக்குவதற்கு உதவியதாக அவர் கூறினார்.*

*நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்புகள், பாதுகாப்புப்படையினருக்கு வலுசேர்க்கும் வகையில் திறம்பட செயலாற்றியதாக அவர் குறிப்பிட்டார்.*

*ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை இந்தியாவின் பாதுகாப்பு அம்சங்கள், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் பாதுகாப்புப்படையினரின் வலிமையை பறைசாற்றுவதாக உள்ளது என்று திரு அமர்பிரீத் சிங் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*நாட்டில் மின்னணு நிர்வாக நடைமுறைகளை ஊக்குவிக்கும் நோக்கில், 7 பிரிவுகளில் மின் ஆளுகைக்கான தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.*

*2026-ஆம் ஆண்டுக்கான சிறந்த மின் ஆளுகைக்கான தேசிய விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.*

*இந்த விருதுக்கான பரிந்துரைகளை செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி முதல், www.nceg.gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கான கடைசி நாள் ஆக்டோபர் மாதம் 15-ஆம் தேதியாகும்.*

*இந்த விருது கோப்பை மற்றும் சான்றிதழுடன் தங்கப்பதக்கம் பெறும் விருதாளருக்கு 10 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகையும், வெள்ளிப்பதக்கம் பெறும் விருதாளருக்கு 5 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.*

*<<<<<<>>>>>*

*ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை கொண்டாடும் வகையிலும், ஒரே நாடு – ஒரே மக்கள் என்பதை உணர்த்தும் வகையிலும் மூவர்ண கொடி பேரணி நடைபெறுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் உதகையில், இந்த பேரணியை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு இன்றியமையாதது என்று கூறினார்.*

*<<<<<<>>>>>*

*இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 7 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இதுபோன்ற சம்பவங்கள் மீனவர்களிடையே அச்சத்தையும், வாழ்வாதாரத்தையும் பாதிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுக்க நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.*

*<<<<<<>>>>>*

*பஞ்சாப் மாநிலத்தின் எல்லைப்பகுதிகளில் போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில், புதிய ட்ரோன் பாதுகாப்பு முறையை அம்மாநில அரசு அமல்படுத்தியுள்ளது.*

*பதான்கோட் பகுதியிலிருந்து Fazilka வரை உள்ள எல்லைப்பகுதிகளில் இந்த ட்ரோன் கண்காணிப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு பஹ்வந்த் சிங் மான் தெரிவித்துள்ளார்.*

*இந்த கண்காணிப்பு நடவடிக்கைகள் எல்லை பாதுகாப்புப்படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.*

*சமூக விரோத நடவடிக்கைகளில் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு எதிராக வலுவான பதிலடி தரும் வகையில் இதுபோன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு பஹ்வந்த் சிங் மான் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*யுக்ரைன் உடனான போர் தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்புடன், ரஷ்ய அதிபர் திரு வினாடிமீர் புடின் விவாதிக்க உள்ளார்.*

*அலாஸ்காவில் இம்மாதம் 15-ஆம் தேதி இந்த சந்திப்பு நடைபெறும் என்று கிரம்ளின் மாளிகை செய்தித் தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.*

*இதனிடையே, யுக்ரைனில் அமைதியை நிலைநிறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு அளிக்க தயாராக உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு வோலோடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>*

*வனவிலங்குகளை பாங்காக்கிற்கு கடத்த முயன்ற பயணி ஒருவரை மும்பை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.*

*மும்பை சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வு தகவலின்பேரில் சோதனை மேற்கொண்ட அதிகாரிகள், பயணி ஒருவரிடமிருந்து அரியவகை வன உயிரினங்களை பறிமுதல் செய்தனர்.*

*வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், அவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.*

*<<<<<<>>>>>*

*தில்லியில் பெய்த கனமழை காரணமாக ஹரி நகர் பகுதியில் இன்று காலை கோவில் அருகே உள்ள சுவர் இடிந்து விழுந்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட எட்டு பேர் உயிரிழந்தனர்.*

*மோசமான கட்டுமானம் காரணமாக இந்த சுவர் இடிந்து விழுந்ததாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

*மீட்புப்படையினர் உடனடியாக செயல்பட்டு இடிபாடுகளில் சிக்கியிருந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட நிலையில் வழியிலேயே அவர்கள் உயிரிழந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இப்பகுதிகளில் மழைநீர் தேங்கியிருப்பதால், அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறுகின்றனர்.*

*<<<<<<>>>>>*

*கென்யாவின் Kakamega பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.*

*பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கால்வாயில் விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு போக்குவரத்து காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.*

*இச்சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்துமாறு அதிகாரிகளுக்கு அந்நாட்டு அதிபர் திரு வில்லியம் ருடோ உத்தரவிட்டுள்ளார்.*

*<<<<<<>>>>>*

*ஆசியகோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று சவுதி அரேபியாவை எதிர்கொள்கிறது.*
*ஜெட்டாவில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.*

*------------*

*உலக விளையாட்டுப் போட்டிகளின் வில்வித்தைப் பிரிவில் இந்தியாவின் ரிஷப் யாதவ் வெண்கலப்பதக்கம் வென்றார்.*
*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*-------------*

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் போடோலேண்ட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.*

*<<<<<<END>>>>>*